SAVITHRI

THE DEVOTED WIFE

A PIECE OF THE

(Hindu Royal Theatrical Performances)

STYLED

Manamohana Natakum.

BY

T. R. GOVINDASAWMY ROW.

Authers of

Dravida Dramas

FIRST EDITION.

Madras.

PRINTED BY C. ARUNACHELA CHETTYAR

SREE THAYANITHI PRESS.

1886.

Price Rs. 1—8—0

Registered Cop

ஸ்ரீமன்

நித்யமங்கள மூர்த்தியே நம:

பதிவ்ரதாசிரோமணியாகிய

சாவித்ரி நாடகம்.

இஃது.

(Hindu Royal Theatrical Performance)

என்னுமியற்பெயரையுடைய

திராவிட மனமோஹன நாடகங்களிலொன்று.

இது.

மேற்படி கம்பெனிக்குத் தலைவரும் தஞ்சைபுரி

ம-ா-ா-ஸ்ரீ, சதாவதானம் சுப்ரமண்ய அய்யர்

அவர்களுடைய கடைமாணுக்கருள் ஒருவருமாகிய

டி. ஆர். கோவிந்தசாமிரூவ் அவர்களால்,

இயற்றப்பட்டது.

இந்நாடகம்.

ஷை கம்பேனியைச் சேர்ந்த மெம்பர்கள்

கேட்டுக்கொண்டபடி

சி. அருணசலசெட்டியாரவர்களது

ஸ்ரீதயாநிதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை ரூபாய் 1-8-0.

ரிஜிஸ்டர் காப்பி ...

உ

முகவுரை அல்லது நூன்முகம்.

நூல் வல்லவர்களான மேலேயோர்கள் புகழும் சால்வதேசத்
தை, தர்மதேவதையும் புகழ்ந்து தன்னிடத்தில் குடிகொண்டுவாழ
செங்கோலோச்சிய த்யூமத்சேன மகாராஜனென்போன், காலகதியி
ஞலே தன் காதலியோடு தானுங்கண்ணிழந்தது, மல்லாது மண்ணி
ழந்து போந்துவன நண்ணி, வானவருந் தொழும்படியான வானப்பி
ரஸ்தர்களாய் தவவேடம்பூண்டு, தனையனுகிய சத்தியவானென்போன்
தங்களுக்கு அதயந்தம் சித்தமகிட்சியோடும், உத்தம ரீத்தியோடும்
தருகிற உதவியைக்கொண்டு, மனவருத்த மில்லாதபடி வாஸம் செ
ய்துவந்தனர். அவ்விதமிருக்க அனேக நாளாய்க் குழந்தையில்லா
து சாக்ஷாத் ஸாவித்ரி தேவியின் பூர்ண கிர்பையினுல் உண்டான
தன் குழந்தையான ஸாவித்ரிக்குத்தக்க மணமகனைத் தேடி பக்குவ
காலத்தில் விவாகம் செய்துவைக்கவேணுமென இக்குவலயத் தரசர்
களுக்கு மிக்க புகழ்ச்சியோடு,' அசுவபதிராசன் எழுதிய நிருபங்களு
க்கு ஒக்க உத்தரம் வாராததினுலே, உளங்கலங்கி உன்னிதமான குணா
திசயங்களை யுடைய தன் கன்னிகையை வரவழைத்து அவட்கேற்ற
கணவனை அவளே தேடிவரும்படி ஆக்ஞாபிக்க, அப்படியே சென்
று சத்யவானை வரித்துவந்து தன்தகப்பனிடம் அகமகிழ்ந்து புகல
ப்புகும் ஸமயத்தில் ஜெகப்ரவஸித்தரான நாரதபகவான் நகைத்து
அவன் அற்பாயுவானதால் கூடாதென மறுத்தும் அவள் அவனைய
ன்றிப் பிறனை வரியேனென ஒரே அடம்பிடித்ததினிமித்தம் அச்வ
பதியென்போன் புத்திரியை அழைத்துக்கொண்டுபோய் அத்தவரா
யனைப் பணிந்து நல்ல சமாதானத்தின்பேரில் சத்யவானுக்களித்
மெத்தக் களிப்புடன் மேன்மைதங்கிய தன்னுறைவிடம் புகுர்
பின்பு தானுகவரித்த கணவன் முதலியோருக்குக் கீழ்ப்
ந்துவருங்காலையில் நாரதபகவான் சொன்ன காலவ
தான் கோரிய வ்ரத மாரம்பித்து முடிவாக்கி
யுங்காலம் சத்யவான் அனுவசியமாய்க் ச
கொண்டுவரப் புறப்பட்டபொழுது

சிறப்புப்பாயிரம்

திருவள்ளுவநாயனார்.

தனில்லவண் மாண்பானாலுள்ளதெ
வண் மாணாக்கடை.

இல்,

பெண்ணிற்பெருந்தக்க யாவுளகற்பென்னுந்
திண்மையுண்டாகப் பெறின்

தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யு மழை

பெற்றாற்பெறிற்பெறுவர் பெண்டிர்பெருஞ்சிறப்புப்
புத்தேளிர்வாழு முலகு

புகழ்புரிந்தில்லிலோர்க் கில்லையிகழ்வார்மு
னேறுபோற் பீடுநடை

மங்கலமென்ப மனைமாட்சிமற்றத
னன்கல னன்மக்கட்பேறு

A PIECE IN MANAMOHANA NATAKUM.

Savitri the devoted wife.

సావిత్రి ఉపాఖ్యానము.

பதிவிரதா சிரோமணியாகிய

சாவித்ரி நாடகம்.

Stage Manager (சூத்ரதார்)—பட்தாவை விட்டு வெளியே வந்தவுடன்

"అంబికా హృదయానందం। మాతృభిః పరివేష్టితం।
భక్తప్రియం మదోన్మత్తం। వందేహం గణనాయకం॥"

"அம்பிகையின் சுதனென்ன வகிலமெல்லாம்புகழ்செலுத்த வருமையான,தும்பிமுகங் கொண்டிருந்த துதிக்கையாம் புழைக் கையால் துயரந் தன்னால், வெம்புமுகமேனருளை வீயொழுகவிட்டதனை விளங்கச் செய்யு,மெம்பிரான் கழலிணைக ளெப்போது மென்னுள்ளத்திருந்து காக்க.

பக்தர்களுடைய இச்சித மனோரதத்தைப் பூரணம் செய்யும் விக்னேச்வரன், நம்மெல்லாரையும் ரக்ஷிக்கட்டும்.

Sing a Song as usual for the appearance of Buffoon

Buffoon—(விதூஷகன்) வெளியேவந்து (ஆத்மகதம்) என்ன ஆச்சரியமாயிருக்கிறது. இது என் தலத்தைவிட மஹா விசேடம் பொருந்தியதா யிருக்கின்றதே. இன்னு மிதனைப் பார்க்கபார்க்க மனதினுக்கு சந்தோஷமுண்டாகிறது. இத்தலத்திலும் ஒரு பித்த னிருக்க வேண்டுமே அவனைக்காணலாம்.

சூத்ரதார்—(Aside)இதென்ன விந்தை.இத்தலத்துற்று என்னை பித்தனா கமதித்தான், இவன் மெத்த சமர்த்தனோ அல்லது எத்தன்மையனோ தெரியவில்லை ; நல்லது இவனின்னானென்று தெரிந்துகொள்வோம்.

(Pub.) பாவா யார் நீ.

விது—வாவா என்னைப்பார் நீ, பிறகு தேர் நீ, பின்புன்னிடம் சேர் நீ.

சூத்ரதார்—நான் சொல்லும் வார்த்தை உன் செவிபடுகின்றதா இல்லையா, ஏன்பேசாதிருக்கின்ருய்.

விது—இல்லே இல்லே, பேசவேணுமென்றே வந்தேன் இவ்விடத்திலிருக்கின்ற இச்சூரியன்குஞ்சுகளேப்பார்த்து நமக்குத்தெரியாமல், இவைகளெல்லாம் எப்பொழு தவனுக்குப் பிறந்தனவென்று, இப்படி, நினைத்துப் பார்க்கின்றேன்.

சூத்ரதார்—இவைகளேயெல்லாம் சூரியன் குஞ்சுகளென்று தீர்மானித்தாய். (of course. Why not). மெத்த புத்திமான் நீ.

விது—நானின்னமொன்றும் யோசித்து என் மனதில் தீர்மானித்திருக்கிறேன். (என்ன). நம்முடைய வாஸஸ்தலத்தில் சூரியன்மட்டுமிருக்கின்ருனேயன்றி,சூரியன் குஞ்சுகளில் ஒன்றேனும்கிடையாது. ஆதலால் இவைகளில் யாதேனும் ஒன்றை எடுத்து, இப்பந்தலில் ஒளித்துவைத்துவிட்டு, நான் போகிறபொழுது என்னேடுகொண்டேகலாமென யோசித்திருக்கின்றேன்.

சூத்ரதார்—அதைக்கொண்டே நீ போவாய் தடையில்லே. நீ யார் எங்கே வந்தாய், எதற்காக வந்தாய்.

விது—தன்மீதிருக்கும் தழைகளே கட்கத்தில் வைதது்க்கொண்டு Seehow fare a Man I am.

சூத்ரதார்—சாபாஸ், ரொம்ப பேஷ், நன்ருயிருக்கிறது லக்ஷணம்.

விது—உம்முடைய லக்ஷ்யத்திற்கு என் லக்ஷணம் குறைவாய்ப் போய்விட்டதோ என்ன. அறிந்தேன் அறிந்தேன் உம்முடைய பொருமையை.

சூத்ரதார்—என்ன பொருமை எனக்கு.

விது—ஏதடா நம்மை திர்ஷ்டிக்கிறவர்களெல்லாம், திர்ஷ்டிபடும்படியான எட்டு லக்ஷணத்தோடுகூடியிருக்கிறேும் ; இவன் நமக்குமேல் கால்சேர்ந்து எட்டேகால்லக்ஷணத்தோடு கூடியிருக்கிருன், இதோடு நமக்கு யோக்கிதை போய்விடுகிறதேஎன்கிற வயற்றெரிச்சலாலல்லவோ,இப்படி பொருமைப்படுகிறீர்; ஏன் உமக்கு இந்த துர்க்குணம்.

சூத்ரதார்—சாபாஸ் நீ யார்மகன்.

விதூ—நம் குடும்பத்திற்கே, ஆறுமுக மாறுமுக மாறுமுக மாறுமுகந் தான்.

சூத்ரதார்—அடேடா நானுன்னை நீ யாருடைய குமாரனென்றேன் என்ன உளறுகின்றாய்.

விதூ—அதுதான் யானும் சொன்னேன் நீர் தெரிந்துகொள்ளாது, குள றுகிறீர்.

சூத்ரதார்—என்ன.

விதூ—நீர் என்ன சொன்னீர்.

சூத்ரதார்—ஆருடைய குமாரனென்றேன்.

விதூ—ஆறுடைய என்றால், என்ன, ஆற்றையுடையவன் அதாவது கங் காதரன், ஸ்ரீசங்கரனுக்கு குமாரன் என்றுதான் அப்பனுக்கு ஆறுமு கமென்றேன். அப்படியே என் அண்ணனுக்கு ஆறுமுகம். ஊரி லுள்ளவர்க்கெல்லாம் ஒரு முகம்போலில்லாது. 6 Faces. எங்கள முத்தண்ணாவுக்கு மாறுமுகம், யானைமுகம். எங்கள் மாமாவுக்கும் மாறுமுகம். ஒருவேளை மச்சத்தின் முகம், மற்றொருவேளை கூர்மத் தின்முகம், பின்னு மொருவேளை சிங்கமுகம், எல்லா வேளையும் மனிதமுகம். எனக்கும் மாறுமுகந்தான், மினிட்டுக்கு மினிட் மாறி க்கொண்டே யிருக்கும். கருப்பாயிருக்கிறது சிவப்பாகும், சிவப்பா யிருக்கிறது வெள்ளையாகும், வெள்ளையா யிருக்கிறது பச்சையாம், பச்சையாயிருக்கிறது மஞ்சளாம. ஒரு நாளைக்கு மீசை யிருக்கும் ஒருநாளைக்கு மொட்டைக் கிடாப்போலிருக்கும். இவ்விதமாக நானா விதமாய் மாறிக்கொண்டேயிருக்கும்.

சூத்ரதார்—சாபாஸ் சாதுர்யமாய்ப் பேசுகின்றாய் உன்பேரென்ன.

விதூ—என் தகப்பன்பேர் பஞ்சானன், அண்ணன்பேர் சடானன், முத்த ண்ணாபேர் கஜானன், மாமாபேர் நிஜானன், தாதாபேர் அஜானன், என்பேர் பஜானன்.

சூத்ரதார்—உன் வம்ச வழியைக் கேட்டு சந்தோஷமடைந்தேன். நீ வித் வானாகவும் காணப்படுகிறாய். எனக்கு கிஞ்சித் உதவிசெய்.

விதூ—என்ன உமக்கு செய்யவேண்டியது.

சூத்ரதார்—போய் விக்னேசுரனை அழைத்துக்கொண்டுவா.

விது—"தொந்திவயிறனே நீர் தொழுது மிக வேத்துகிறீர், எந்த பயன் கொளவோயானறியேன், வந்த, தன் வினையைத் தீர்த்துகொளத் தக்க மருந்தைக் காண, தின்னு மலேபவனே யிங்கு.

சூத்ரதார்—துஷ்டா ஈச்வராதிகளுடைய யோக்கிதையை நீ யறியமாட்டாய், சீக்கிரம் போய் அழைத்துக்கொண்டுவா போதும்.

விது—கல்லது நீராரம்பியும் இதோ கொண்டுவருகிறேன்.

N. B. Sing a Song as ususual for the appearance of விக்னேசர் (Belly God) and சரஸ்வதி. (Goddess of Literature) Finishing it, then begin to act the story.

அச்வபதிராஜா சபை.

சோப்தார்—ராஜாதிராஜ அச்வபதிராஜ மஹாராஜ் ஆஸ்தேகதம்ராஜா தர்பார் நிகாஸ்ஸலாம்.

ராஜன்—(வந்துட்கார்ந்து மந்த்ரியை வரவழைத்து அவரைப் பார்த்து) ப்ரதான். சர்வ ஜெகத் கர்த்தாவாகிய ஜெகதீசனுடைய கிருபாகடாக்ஷத்தால் நான் இந்த பூவுலகத்தில் ராஜகுலத்தில்ஜன்மத்திற்கு வந்தேன். ப்ரதான், "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன செய்வதைச்செய்வான் தவசி, கொடிதொரீஇ. நல்லவை செய்வானரசன், இவர்மூவர், பெய்யெனப் பெய்யுமழை" என்றிவ்விதமாய்பெரியோர் சொல்லியிருக்கிற நீதிவாக்கியத்தின்படி, எவ்வரசன் சர்வ ஜனங்களுடைய ஹிதத்தைக்கோறி சத் தர்மவழிகளில் தா னுடன்பட்டு தன் பிரஜைகளையு முட்படுத்துகிருனே, அவனைத் தான் சர்வ ஜனங்களும் மதிக்கின்றன. பாரும் ப்ரதான். "மழையின்றி மானிலத்தார்க்கில்லை, மழையும் தவமிலாரில் வழியில்லை, தவமும்அ ரசிலாரில் வழியில்லை, அரசும் இல்வாழ்வாரில் வழியில்." என்னும் பழமொழியின்படி, ஜனமிருதியில்லாவிடில் நமக்கென்ன யோக்கிதை உண்டு. நாம் எங்கிருந்து ராஜ்யம் நடத்துவது. ஆதலால் ப்ரதான், நான் தமக்குமென்மேலும்நம்பிரஜைகள் விஷயத்தைக்குறிதது சொல்லவேண்டுவதில்லை, அவர்களையெல்லாம் ஜாக்ரதையோடு பாலித்துவருகின்றீர், இருந்தபோதிலும் நானும் தமக்கு கிஞ்சித் ஞாபகப்படுத்திக் கொடுத்தால், மிகுந்த கலமாயிருக்குமெனச் சொல்லலாயினேன். இப்படி புகலப்புகுந்தேனென, என்மீது தாம் கோபங் கொள்ளாதிருக்கக் கடவீர்.

ப்ரதான்—மஹாராஜ் முக்கியமாய் மனிதனெனப் பிறந்தபிறகு செய்யவேண்டிய கர்த்தவ்யங்களெவை, "கெடுக்கப்படுவது தீக்கருமம் நாளும் கொடுக்கப்படுவதருளே, அடுத்தடுத்துண்ணப்படுவது நன் ஞானம், எப்பொழுதும் எண்ணப்படுவது வீடு." என்று பெரியோரால் கட்டளையிட்டவாக்கியம். இதையே தாம் விரதமாக நடத்திக் கொண்டு வருகிறீர்கள், அது சகலமானவர்களுக்கும் தெரிந்ததுதான் இப்படியிருப்பதினாலேதான் ப்ரஜைகளெல்லாம் "கற்புடைய பெண்ணமிழ்து, கற்றடங்கினனமிழ்து, நற்புடைய நாடமிழ்து நாட்டுக்கு, நற்புடைய மேகமே சேர் கொடிவேந்தமிழ்து, சேவகனும் ஆகவே செய்யினமிழ்து". என்னும் நீதிசாஸ்திரத்திற் சொல்லியிருக்கிற பிரகாரம் தம்மை அமிர்த துல்யமாய் நினைத்துக்கொண்டு தங்கள் தங்க ளாசாரமுறைமை தவறாது ஜாதிவர்ணாச்ரமப்படி சத் தர்மத் தோடு நடந்து வருகின்றார்கள். ப்ரபோ மஹாராஜ்—யோசித்துப் பாருங்கள், அம்ர்தம் சமீபத்திலிருக்கையில் மரணத்திற்கு யாராவது பயப்படுவதுண்டா, அதுபோல தம்மை யண்டின இப்பிரஜைகளுக்கு துக்க மிப்படிப்பட்டதென்று தெரியுமா, எதுவிஷயத்திற்காக ப்ரஜைகள் விஷயத்தில் சிந்தா க்ரஸ்தராகுகிறீர்கள்.

அரசன்—சாபாஸ் பிரதான்—மந்திரிவர்ய, பாரும், ஜெகத்தினிடத்து "பொன்னுடையரேனும் புகழுடையரேனு மற்றென்னுடையரேனு முடையரோ, இன்னடிசில் புக்களையும் தாமரைக் கைப்பூ நாறுஞ் செய்யவாய், மக்களை யிங்கில்லாதவர்." "சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும் என்ன பயனுடைத்தாம் இன் முகத்து, முன்னம், குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய் சிறுகுதலைக் கேளாச்செவி." ஒருவனுக்கு மிகுந்த கீர்த்தியும் அளவிறந்த பாக்கியமுந்தானிருந்தது, புத்ரபாக்கியத்திற்குச் சமானமாமா; பிரதான் "குழலினிதுயாழினிதுஎன்பர் தம்மக்கள் மழலைச்சொற்கேளாதவர்." குழந்தைகளுடைய கொஞ்சுதலான வார்த்தையைக் கேட்கக் கொடுத்துவையாது புன்னகை நரகமே கதியா யடையும் சண்டாளர்கள்தான் "குழலினி துயாழினிது என்பர். அந்தரஸந் தெரிந்த பெரியோர். "குழவிதளர் நடையக் கண்டலினிதே, அவர் மழலை கேட்டலமிழ்தி னினிதே" என் றிவ்வண்ணமாகச் சொல்லப்படுகுவர். ப்ரதான் தம் போலொத்தவர்களுடைய உத்வியினாலே இவ்வளவு கீர்த்தியும், எல்

லோரும் பணியத்தக்கப் புகழையும், ஏராளமான செல்வமுமுடைய அரசனுயிருந்தும், கிஞ்சித்காலத்திற்குமுன் இப்படிப்பட்ட அபவாத த்திற்குள்ளாயிருந்தேனல்லவா. பிரதான் அதை நினைத்துப்பார்க்கின் இப்படிப்பட்டதுக்கம் ஒருவருக்கும் ஜன்மான்த்ரத்திலுங்கூடாதென ப்ரார்த்திக்கிறேன். சசிவ---இப்படி துக்கமுற்றுக்கொண்டிருந்த என க்கு ஜெகத்ஜனனி சாவித்ரியென்பவள் என் தவப்பேறுக்கு மனமகிழ் ந்து கோரமான என் விசாரந்தொலைத்து ஒரு கன்னிகாரத்னம் ப்ரா ப்தமாகும்படிசெய்தாள். பிரதான்—என்னசொல்லுவேன் என் கன் னிகையினுடைய ரூபலாவண்யமும் பலவாறுகிய அவளுடைய குண ங்களும்; ஹாஹாஹா, பிரதான்ஜி—நினைக்க நினைக்க ஆச்சரிய முண் டுபண்ணுகிறது. தம்போலொத்தவர்களும் மகிழும்படியாயிருக்கிற து அவளுடைய புத்தி சாதுர்யம்.

பிரதான்—மஹாராஜ். கேட்பானேன் தம் முதரத்திற் பிறந்த குழந் தை அற்பமாயிருக்குமோ என்ன; புலிதனக்குப் பூனைப்பிறக்குமா; அதுவுமல்லாமல் அது சாதாரணமாய்ப் பிறந்த குழந்தையா, அகி லநாயகியான சாவித்ரிதேவியைக் குறித்துத் தாம் புரிந்த அருந்தவ த்தால் அந்த ஜெகதீச்வரியே மனமகிழ்ந்து தம்முதரத்தில் புத்திரி யாய் பிறந்திருக்கிருளேதவிர வேறென்றுமில்லை. பாருங்கள். "రాత్రౌ దీపశ్చన్ద్రః। ప్రభాతే దీపకో రవిః। త్రైలోక్యదీపకో ధర్మః। సుపుత్రః కులదీపకః॥ சந்த்ரன் இரவையும், சூரியன் பகலையும், தர்மம் திரிலோகத்தையும் விளங்ச்செய்கிறதுபோல குலத்தை சீலகுணட்யனை புத்ரன்விளங் கப்பண்ணுகிருன். அப்படிப்பட்ட புத்ரனும் தான் பிறந்த குலத் தைமட்டும் விளங்கப்பண்ணுவான், புத்ரியோ அப்படியல்ல, தான் பிறந்தயிடம் புகுமிடமாகிய உபயகுலத்தையும் தன் நற்குண நற்செ ய்கைகளினுலே பிரகாசிக்கச்செய்கிருள். இப்படியிருப்பதினுலே தான் "புத்ராத்சதகுணம்புத்ரீ" எனசகலசாஸ்த்ரங்களுமுறையிடுகி ன்றன: இதனலே "எழுபிறப்பும் தியவைதீண்டா பழிபிறங்காபண் புடைமக்கட்பெறின்." என்னும் வார்த்தை தமக்குரிமையானதுபோ ல நாளதுவரையில் ஒருவருக்கும் உரிமையாகவில்லை.

ராஜன்—பிரதான்—அமிர்த பிந்துகளுக்குச் சமானமாய் கர்ணச்ராவிய மாக இருக்கிறது தமது ஒவ்வொரு வார்த்தையும். சகலமு மறிந்த தம்மைப்போன்ற மந்த்ரிவரியரும் சாவித்ரியைப்போன்ற குழந்தை

யும் நான் அடைந்தது, கேவலம் நான் பாக்கியசாலியென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது. பிரதான்ஜி—ஒருவன் கன்னிகாதானபலனை அடையவேண்டியிருந்தால் என்னசெய்யவேண்டும். "அஷ்டவர்ஷாபவேத்கந்யா" என்றபடி கன்னிகையினுடைய எட்டாம்வருஷத்திலேயே தக்கவரனைத்தேடித் தகுந்த சுபமுகூர்த்தத்தில் கன்னிகையை விவாகம்செய்து கொடுத்துவிடவேண்டும், இல்லையாயின் உபயோகமில்லை; அவ்வயதுக்கு மேற்பட்டு விவாகம் நடத்துவதாயிருந்தால் அம்மகோத்ஸவத்தைக் கண்ணினால் பார்த்தானந்திக்கலாமேயன்றி அப்பலனடையமாட்டான்என்று தமக்கு நான் ஏற்கனவேதெரிவித்து, ராஜகுமாரர்களுடைய படங்களை வரவழைத்து கன்னிகைக்குங்காட்டி அவள் ப்ரியத்திற்குகந்தவனை யவளுக்கு விவாகம்செய்துகொடுத்துவிடவேணுமென்றேன். தாமும் ஏதோ கிஞ்சித் பிரயத்னத்திற் காரம்பிவித்து எது காரணத்தினாலோ நிறுத்திவிட்டீர். பிரதான்ஜி-பாரும் வத்சையோ உபபர்வமடைந்துவிட்டாள் இன்னும் நான் அவட்கு கல்யாணமுதலியதும் நடத்தாவிடில் லோகத்தில் என்போன்ற ராஜர்களெல்லாம் என்னைத் தூஷிக்கமாட்டார்களா; இது தமக்கு செவ்வையாய்த் தெரிந்திருந்தும் தாம் ஏதோ அசட்டையாயிருக்கின்றீர், அது என் துர்அதிர்ஷ்டமே.

பிரதான்—மஹாராஜ். நானும் மஹாராஜாவுடைய ஆக்ஞையை சிரசாமான்யம்செய்து நம் வத்சையைப்போன்ற 56 படமெழுதி ஒவ்வொரு ராஜனுக்கும் அனுப்பினேன். அவர்கள் நம் குமாரத்தியினுடைய படத்தையும் எழுதியனுப்பின பத்திரிக்கையி லடங்கிய அவளது குணாதிசயங்களையுந்தேர்ந்து ஒவ்வொருவரும் அவர்களைத் தன்னைப்பெற்றதாயினும் அதிகமாக யாவரிடத்திலும் அதிக அன்புபொருந்தியவளும், அருந்ததிக்குச் சமானமானகற்புமுடையவள்போலும் தோற்றுகிறஇவள், கேவலம்தேவலோகத்து அணங்காயிருக்கவேண்டுமாதலால் இப்பூவுலகின்கண் நம்போன்ற ராஜகுமாரர்கள் இவளை விவாகம்செய்துகொள்ள அவ்வளவுபாக்கியம்பெற்றவர்கள் ஒருவருமில்லை. ஆதலால் நம்மால் முடியாது. நமக்குத் தாம் பத்ரிகை யனுப்புவதும் வியர்த்தமென்று இவ்வண்ணமாய் மறுமொழி வந்துசேர்ந்தது. நீங்கள் மணம்புரிந்துகொள்ளாவிட்டாலும் அக்கரையில்லை, தங்களுடைய படமாவது எழுதியனுப்பக் கோருகிறேன்என்றெழுதியனு

ப்பினேன். பிறகு அப்படியே ஒவ்வொரு ராஜனும் தன் குமாரனுடைய படங்களை எழுதியனுப்பி யிருக்கிறான். இதோ வேணுமாயினும் கொண்டுவந்து காண்பிவிக்கிறேன்.

ராஜன்—மதி பிரமைகொண்டவனைய 2 மினிட் பேசாதிருந்து பெருமூச்செறிந்து பிரதான்ஜி—இப்படியின்கண் செப்புவதற்கரிய ஒப்புவமை யில்லாத மன்னர்களிருந்தும் என் புத்திரியை பாணிக்ரஹணம் செய்துகொள்ளும் யோக்கியர் ஒருவரேனு மில்லையா ; ஆச்சரியமாச்சரியம். பிரதான். பட்ட காலிலேயேபடும் கெட்ட குடியேகெடும் என்றபடி ஏற்கனவே புத்ரசந்தானமில்லாது விசனமுற்றுக்கொண்டிருந்த எனக்கு ஆகாயத்தில் மின்னல்தோன்றி மறைவதுபோல அனேக புத்ரர்களுக்குச் சமானமான ஒரு புத்ரியை ஈசன் கொடுத்தும் பின்னும் நால்கின்னப்படவே வைத்தானேயன்றி சுகங் கொடுக்கவில்லை, என்னசெய்வேன், இந்த சமாசாரத்தைக் கன்னிகையினிடம் எவ்வண்ண முரைசெய்வேன். பிரதான். புத்ரனுக்கேனும் புத்திரிக்கேனும் தக்கப் பருவகாலத்தில் எப்பாடுபட்டாவது விவாகம்செய்துவைய்யாத மாதாபிதாக்கள் கேவலம் அவர்களுக்கு சத்ருவாவதோடுகூட அவர்களுடைய கெடுதலைக்கு இப்பெற்றோர்களே காரண பூதர்களாகிறார்கள். ஆயினும் புத்ரனுக்கு அக்கரையில்லை. அதிலும் உபபர்வமடைந்த புத்ரி கிரஹத்திலிருந்துக்கொண்டு பெருமூச்சு விடுவாளாயின் அவ்வில்லம் விடியாது போய்விடும், இது நிச்சயம். பிரதான்ஜி இப்பாவத்திற்கு நான் என்னசெய்வேன்.

மந்திரி—மஹாராஜ் கவலையுறவேண்டுவதில்லை. இதற்குத் தக்கயுக்தி எனக்கொன்று தோற்றுகிறது. அவ்வண்ணமாக முடிக்கத்துணிவீர்களாயின் எல்லோருக்கு மதில் சுகமுண்டாமென்று நம்புகிறேன்.

இராஜா—பிராதான். அப்படிக்கென்ன யுக்தியது கதனியுஞ் சீக்ரம் கேட்கலா மொருமுறை.

மந்த்ரி—மஹாராஜ். கன்னிகையைத் தாம்நேரில்வரவழைத்து நம்மால் வரவழைக்கப்பெற்ற ராஜர்களுடைய படங்களை ஒவ்வொன்றாகக் காண்பிவித்து எந்த ராஜகுமாரனை புத்ரி வரிக்கின்றாளோ அப்படிப்பட்டவன்தான் இவளை அங்கிகரிக்கமாட்டேனென்று சொன்னாலும் அவனதுகாலில் நாம் விழுந்து எப்படியாவது நம் குழந்தையை அவனுக்கே விவாகம்செய்துகொடுத்துவிட்டால் அப்பொழுது ஒருவரு

க்குந்துக்கமில்லையென்பதாக எனக்கு இப்படிப்பட்ட ஒருகற்பனை உண்டாகிறது.

இராஜா—பிரதான்ஜி. தாம் இயம்பிய யுக்தியை ஆராய்ந்து பார்க்குமிடத்து என் புத்திக்கு மனுகூலமாகவேயிருக்கின்றது ஆயினும் வலிய நாம் பெண் கொடுக்கப் போவோமானல் நம் ஜாதிக்கோர் ஏளனமுண்டாகாதா. அவ்வபிமானத்தால் கிஞ்சித் யோசனை உண்டாகிறது.

பிரதான்—ப்ரபோமஹாராஜ். இது கேவலம் தாரித்ர தசையிலிருக்கும்படியானவர்களுக் கிவ்வார்த்தையேதவிர தம்போன்ற பூபதிக் கிவ்வார்த்தை யுரியதா. பாருமின் "குணயிருந்தாலும் குலமிருந்தாலும் கொழுந் தமிழின் மணமிருந்தாலு மதியிருந்தாலு, வழுத்தியவங் கணமிருந்தாலு மரைக்காசும் பொருளு சிங்காரவரைப்பணமிருந்தா லவர்க்கெல்லோருமஞ்சலி பண்ணுவரே." "యస్యాస్తి విత్తం సనరః। కులీనస్సపండితస్స శ్రుతవాన్గుణజ్ఞః। సఏవవక్తాసచ దర్శనీయః। సర్వేగుణాఃకాంచన మాశ్రయంతి॥" இவ்விதமாய் லோகத்துக்கு முக்கிய சாதனமாகிய பொருளை நாம் நம்முடைய கன்னிகையை பாணிக்ரஹணம் செய்விக்கும்பொழுது கன்னிகாதானபலனடைய ஏராளமான திரவ்யம்கொடுக்கையில் நம் ஜாதியைக்குறித்து தூஷணிப்பவனு மிவ்வுலகலிருப்பனே. என் தாமசின்தை யுறுகிறீர்கள்.

ராஜா—ப்ரதான். மெய்யே தாம் சொன்னவார்த்தை அப்படியானல் சீக்கிரம் வத்ஸையை வரவழையும். (ஆக்ஞை).

N. B. உடனே மந்திரி சேவகனிடம் கட்டளையிட்டு ஸாவித்ரியை வரவழைக்கவேண்டும். அவள்வந்து மரியாதைப்படி தந்தையிடம் உட்காருகிறவரையில் சூத்ரதாரர் அவ்வமயத்திற்குறிய ஒருபாட்டு பாடவேண்டும்.

சாவித்ரி—பித்யா. எதற்காக இவ்வளவு த்வரையா யென்னை வரவழைத்தீர்.

இராஜா—வத்ஸே. நானித்தனைக்காகத்தான் உன்னை வரவழைத்தேன். பார் அனேகநாளாய் எனக்கு ஸந்தானமில்லாமல் கட்சியாக பெருந்தவமியற்றி ஸாக்ஷாத் ஸாவித்ரிதேவியினுடைய வரப்ரஸாதத்தால், வறுமையால் துன்புறுவோனுக்கு நவநிதியம் கிடைத்ததுபோல, கன்னிகாரத்னமாகிய நீ தோன்றினை. இப்பொழுது உனக்கு உபபர்வமாகியும் உன்னை நான் விவாகஞ்செய்துகொடுக்காமல் பேசாது இவ்வித

மாகவே வைத்திருப்பேனாயின் எனக்கு நிகரான ராஜர்கள்முதலி
யோர் என்னை தூஷணிக்கமாட்டார்களா ; தன்னிமித்தம் அனேக
மான ராஜர்களுடைய படங்களை வரவழைத்திருக்கிறேன் அவர்களில்
நீ யாரைக் கோறுகின்றனையோ அவனுக்குன்னை மணம்புரிவித்துவி
டலாமென் றபிப்ராயம்கொண்டு அவைகளை உனக்கு காட்டவேண்டு
மென்று வரவழைத்தேனேயன்றி வேறில்லை.

சாவித்ரி—தாதமஹாராஜ் தாமோ என்னருமை பெருமையெல்லாமறி
ந்தவர். தம்மபிப்ராயத்திற்கு மாறுதல்சொல்ல இவள் ஸக்யளா,தாம்
யார்பேரி லபிமானம்வைத்து என்னை விவாகஞ்செய்துகொடுக்க இச்
சிக்கின்றீரோ அவரை நான் நிராகரிக்கலாமா ; அல்லது ஸ்த்ரிகள்
இன்ன புருஷனைத்தா னடையவேணுமென்று சொல்லவாவது அல்
லது அவர்கள் மனோபீஷ்டப்படி நடக்கவாவது அவர்களுக்கு சுதந்
தாமுண்டா காரணம் "పితారక్షతికౌమారే। భర్తారక్షతియౌవనే। రక్షంతి
వార్ధకే పుత్రాన స్త్రీ। స్వాతంత్ర్యమర్హతి॥" "இளமையிற் றந்தையாலு
மெவ்வனமதனிற்றுன்கொள், வளம்பெறு கணவனாலும் வார்த்திகம்
தனிற்றுனீன், முளமகிழ்புதல்வராலு மோம்புதலடைவதாலவ், விள
மயில் தனக்கெப்போழ்துமிலைசுதந்திரமேயென்ப" எனஇவ்வாறு நீ
திநூலிருப்பதை தாம்உணர்ந்தும்,தாம் என்னிடத்தில் இவ்வார்த்தை
சொல்வதுசரியல்ல பிதா.

இராஜா—பிரதான். குழந்தையினுடைய இனிமையான அமிர்தவச
னம் கேட்டீரா.

மந்த்ரி—மெய்தான் மஹாராஜ். "மக்கள்மெய்தீண்டல் உடற்கின்பம்
மற்றவர் சொற்கேட்டல் இன்பம்செவிக்கு" இதற்குக் கேட்பானேன்
ப்ரபோ.

இராஜா—வத்ஸே. நீசொல்வதுபோலவே தக்க பருவகாலம் பார்த்துக்
குழந்தைகளுடைய யோக்கிதைக்கேற்ற,வதுவையாவதுவரனையாவது
தேடி மணம்புரிவிப்பது மாதாபிதாக்களுடையகடமை ஆயினும்
லோகாரூடி எப்படி "కన్యావరయతేరూపం। మాతావిత్తం పితాశ్రుతం। బాంధవా
కులమిచ్ఛంతి। మిష్టాన్నమితరేజనాః॥" கன்னிகை தனக்கு வாய்க்கும்புருஷன்
அழகுள்ளவனா யிருக்கவேணுமென் றிச்சிப்பாள், அப்பெண்ணை
பெற்றவள் தன் மருமகன் பணக்காரனா யிருக்கவேணுமென்பாள்
அப்பெண்ணுடைய தகப்பன் தன் மாப்பிள்ளை வித்வானாயிருக்கவே
ணுமென்று கோறுவான், அப்பெண்ணுடைய ஸகோதரர்கள் தங்க
மைத்துனன் ஸரஸியா யிருக்கவேணுமென்று நினைப்பார்கள், பந்து
ஜனங்கள் வருகிற மாப்பிள்ளை நல்ல குலீனனாயிருக்கவேணுமென்

12

விரும்புவார்கள். மற்றவர்கள் கல்யாணத்தில் விருஷ்ட்டான்னபோ
ஜனம் பண்ணலாமென்று ஆவலா யிருப்பார்கள. இப்படி யிருப்
பதாலும்,இப்படிப்பட்ட விஷயங்களில் குழந்தைகளுடைய அபிப்
ராயமொத்து நடக்காததகப்பன் கேவலம் அவர்களது அருமை பெ
ருமை யறியாத மூடனென்று சொல்லப்படுவதாலும்,உன் அபிப்
ராயத்திற்கிசைந்த கணவனை நீபொறுக்கியெடுத்துச்சொல்வாயானாலதி
ன்படி நடக்கலாமென்று அப்படங்களை உனக்குக் காண்பிவிக்க விரு
ம்புகிறேன்.

சாவித்ரி—பித்யா. அப்படியானால் அவைகளைக்கொண்டு வரச்சொல்லுங்
கள் பார்க்கலாம்.

N. B. இராஜன் மந்த்ரியிடம் கட்டளையிட்டு அப்படங்களையெல்லாம
வட்குக்காட்டி அதினுடைய விஸ்தாரங்களெல்லாம் சொல்லச்செய்ய,
ஸாவித்ரி ஒவ்வொன்றினுக்குமஓரோர்குற்றங்காட்டி தனக்குவேண்டா
மென்று நிராகரிக்க, ராஜன் விதனத்தோடட்காரவேண்டும்.

சாவித்ரி—பித்யா. என்ன மஹாராஜ தாம் கின்னவதனத்தோ டிருக்
கிறீர் பாரும். லோகத்தில் ஸர்வமான சுகத்தைக் கொடுப்பதற்குப்
புத்திரனாகிலும் அல்லது புத்திரியாகிலும் வேண்டுமென்பார்கள்.
அப்படியே நான் பூர்வம் செய்த புண்யவ...
ரியாகப் பிறந்து தமக்கு சுகங் கொடுப்பதற்குபதில...
ப்ராப்தமானேன். பித்யா—இந்த சண்டாளியினால் தய...
கஞ் சம்பவிக்கவேண்டுமா. இதினுடைய ஏதுவென்ன மஹாராஜ.

ராஜா—கன்னிகே. உனது இனிமையான வசனங்களைக்கேட்டு நனி
தாகஅமிர்தபானம்செய்வதுபோலானந்தங்கொள்ளவேண்டியதாயிரு
க்க, வத்ஸே—உன்னைப்போலொத்த பாக்கியவதியான புத்திரி என
க்கிருந்தும் கேவலம் சண்டாளன் துக்கத்திற்கு ப்ராப்தமாயினேன்.
என்னசெய்வேன் நானிந்தசமயத்திலிறுதலைக்கொள்ளியெறும்புபோல்
ஆயினேன். வத்ஸே—உன்பேரில் சாக்ஷியாகச் சொல்லுகின்றேன்.
என் தவப்பேறுலுண்டான உன்னைவிவாகம்செய்துகொடுத்து அனே
கமான பத்ரர்களாலும் புத்ரிகளாலுமடையும்ஸுகம் உன்ஒருத்தியா
லடையலாமென்று நினைத்து அனேகமானராஜர்களுடைய படங்களை
யெல்லாம்வரவழைத்துஅவர்கள்வந்துன்னைவிவாகம்செய்துகொண்டு
போனால்போதும், எப்படியாவது உன் விவாகமுடிந்தாலாயிற்றுஎன

எவ்வளவோபாடுபட்டும்,ஒவ்வொருராஜகுமாரனும் உன்னை அவர்கள துகுலதெய்வமாகவும் தெய்வப்பெண்ணாகவும், தான் உன்னை மணம புரிந்துகொள்ள அவ்வளவுயோக்கிதையில்லாதவனென்றுமெண்ணி, விவாகம்செய்துகொள்ளமாட்டேனென்கிறான். இதுவிஷயத்தை நான் நினைத்துப்பார்க்கையில் என் சிந்தை வாட்டமடைகின்றது. (ఒన్యాశాస్త్ర హం ప్రదాస్యామి। వరయిత్వంయథేప్సితం। శ్రుతంహి ధర్మశాస్త్రేషు। కన్యాదానం దత్తం విధిః॥) கன்னிகைகளுடைய அபிப்ராயத்திற்கேற்ற வரனைத் தேடி எவன் விவாகம்செய்து கொடுக்காமலிருக்கிறானோ அவனுக்குப் பாவமும் பழியும் வந்து ஸம்பவிக்கிறது. ஆகையால நீ உன் னபிப்ராயத்திற்கேற்ற வரனைத் தேடிக்கொண்டுவந்தாயானால் உடனே நானுனக்கு விவாகம்செய்துகொடுத்தானந்தப்படுவேன்.

ஸாவித்ரி—பித்யா. நீரோ லோகத்தைப் பரிபாலிக்கின்ற மஹாராஜா தாம் பிரயத்தனப்பட்டும் எனக்குத் தக்க வரனைத்தேட அசக்தராயிருக்கையில் நானோ அபலை, அதிலும் பாலை, என்னாலெப்படி முடியும்.

ராஜா—என்னருஞ்செல்வமே. வத்ஸே—நானென்னசெய்வேன் இப்பொழுதுனக்கு விவாகம்செய்துகொள்ள வயதுவந்துவிட்டது; நீ யில்வாழ்க்கைக்கு முரியாளாய்விட்டாய், என்றைக்கூடி ப்ரயத்னஞ்செய்து மிதுவரையிலு முன்னை யொருவரும்வந்து வரிக்கவில்லை. ஆதலின் நீயே பல இடங்களிலும பார்த்து உன் மனதிற்கேற்ற புருஷனைத் தெரிந்துவா. எற்றிருக்குமாயின் அவனுக்கே உன்னை மணமாலை சூட்டுவிக்கிறேன். பெண்ணுக்குப் பொருத்தமான பர்த்தாவைத் தேடி கல்யாணம்செய்விக்காத பிதாவை ஸகலமானபேரும் நிந்திப்பார்கள். ஆதலால் அப்படிப்பட்ட நிந்தை எனக்கு நேரிடாதபடி நீ செய்துகொள்ளவேண்டும் இப்படி சொல்லுகிறேனென்று என்பேரில் மனஸ்தாபப்படாதே.

ஸாவித்ரி—பித்யா. "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்னும் பழமொழியைப்போல தம்முடைய வார்த்தையையே ஆசீர்வாதமாக வைத்துக்கொண்டு தம தாக்ஞையின்படிபோய் தக்க வரனைத் தேடி வருகின்றேன்.

ராஜா—வத்ஸே. போய்வா. உன் ஸகாயத்திற்கு சில மந்த்ரிமார்களையும் கொஞ்சம் ஸைன்யங்களையு மனுப்புகின்றேன். (வந்தனம்-கல்யாண்).ப்ரதான்—கன்னிகையோ நமதாக்ஞையின்படி தக்கவரனைத்தேடிவருவாள். வாரும் விவாகமஹோத்ஸவத்திற்காக வேண்டிய காரியங்களைத் தயார்செய்யலாம்.

N. B. படதாவை விட்டுவிடவேண்டியது உடனே 5 Minites வரையில் பாட்டுகச்சேரி செய்யவேண்டியது.

The End.

ACT II.

இரண்டாம் அங்கம்.

N. B. ஸத்யவான் தன் அந்தகர்களான தாய்தந்தையரை உட்காரவைத்து மிகுந்த உபசாரமான மொழிகளுடன் அவர்களுக்கு ஸ்நாநமுதலியதும் செய்துவைக்க தான் காவடிகட்டிக் கொண்டுவந்த ஜலத்தா லவர்களுக்கு அபிஷேகம்செய்து, காய் கனி கிழங்குகளை ஊட்டுகிற பாவனையாயு மிருக்கச்செய்து, தான் அவர்களுடைய அன்பானகட்டளைக்கு எதிர்பார்ப்பவன்போல கைகட்டிக்கொண்டு சமீபத்தில் நின்றுகொண்டிருக்கும்சமயத்தில், சாவித்திரிமட்டும் தனியாய் அங்குவந்து சேரும்படி சபைநிரூபிக்க வேண்டியது.

சாவித்ரி (aside) நானோ என்பிதாவின் ஆக்ஞையின்படி யென் யோக்கியதைக்கும்குணத்திற்கும் தக்கவரைத்தேடப்புறப்பட்டு அநேகமான நாடுநகரங்களும் பலவகைப்பட்ட ரிஷியோர்களும் முனீச்வரர்களும் தபம்புரியும் வனாந்திரங்களையும்சுற்றிக்கொண்டு, திவ்வியஸ்தலங்களும் புண்ணிய தீர்த்தங்களுமாடி கடசியாக இவ்வனத்திற்கு வந்துற்றேன். இவ்வனத்தின் எல்லை மிதித்தவுடன் என்தேகம் புளகாங்கிதமடைகின்றது; சிலசுபசின்னங்களும் என்கண்ணிற்கு புலப்படுகின்றன. ஒருக்கால் என்னை வரிக்கும்வரன் இவ்வனத்திற்றான் வாசம்பண்ணுவனோ என்னமோ தெரியவில்லை. இன்னும் சற்று எட்டிப்போய் பார்க்கலாம்—சமீபத்தில் வந்துநின்று உற்றுப்பார்த்து—ஹா ஹா ஹா என்ன ஆசசரியமிது, இதுகாறும் நானிப்படிப்பட்ட அற்புதம் பார்த்ததில்லை, இவனைபார்க்கின்றேன் எனக்குசொல்லோணாதஆநந்தத்துடன் இவனிடத்தில் எனக்கு கிஞ்சித் லஜ்ஜையு முண்டாகிறது. அநேகமானதிவ்விய ஸ்தலங்களையெல்லாம் சுற்றினேன், ஆயினும் இக்காலத்தில் என்கண்ணிற்குப் புலப்பட்ட இப்படிப்பட்ட ஸத்ய ஸந்தனைப்போல் நான் எங்குங்கண்டதில்லை. ஹா ஹா ஹா என்னென்றுசொல்லுவேன் இந்த மஹானுபாவனுடைய பக்திச்ரத்தை; மாதாபிதாக்களுடைய அடிவணங்கி அவர்களுக்கு உபசாரவார்த்தை

களசொல்லி அன்னவர்களுக்கு சந்தோஷமுண்டாகும்படி செய்து, அன்போடுநடக்கிற இந்தபுண்யபுருஷனைப்போல் நானெத்தலத்திலும் பார்த்ததில்லை. இவனென்ன இராஜகுமாரனோ அல்லது ராஜரிஷியின் புத்ரனோ, அல்லது இயற்கையானரிஷியின் புத்ரன்தானோ, அல்லது பதினெண்வகை ஜாதியர்களாகியதேவர்கூட்டத்திலொருவனோ, என்னமோதெரியவில்லை-இல்லை இல்லை-இவனுடைய ரூபலாவண்யமும் கம்பீரமான நடைபாவனைகளையும் செவ்வையாய் கவனித்துப் பார்க்கையில் பூமியை நாயகியாக அடையும் விசாலமான வக்ஷஸ்தலத்தோடுகூடியவனாக காணப்படுகிறபடியால் இவன் ராஜகுமாரனேயன்றி வேறல்ல. ஏதோகாலகதியினாலே இப்படிப்பட்ட பரதேசிக்கோலத்தையடைந்திருக்கிறான். இருந்தபோதிலும் அக்கரையில்லை. என்பிதாவினிடம் இச்சங்கதிகளைத்தெரிவித்துஇவனையேவரிப்பேன். இப்பொழுது இந்தசுபமுகூர்த்தத்திலேயே என்பிதாவினிடமேகுகின்றேன் புறப்பட்டு பக்கமிருக்கும் படதாவில்மறைந்து போகவேணும். உடனேபடதாவை விட்டுவிடவேண்டும்.

அச்வபதிராஜன்—பிரதான்ஜி பாரும் அனேகமான சைன்யங்களோடு மந்த்ரி சமேதமாய் குமாரத்தியை வரனைத்தேடிவரும்படி அனுப்பி அநேக நாளாயின, இன்னும் ஒருவரேனும் வரவில்லை, ஒருசமாசாரமும் செவ்வையாய்த் தெரியவில்லை. ப்ரதான்—புத்ரி தனக்கேற்றவரன் அகப்படவில்லை என்பதாய் துக்கங்கொண்டு ப்ராணத்யாகம்செய்ய, அக்கொடுந் துயரங் கண்ணுற்ற மற்றவர்கள் எனக்குப் பயந்து வராதபடி வனத்திலேயே வாஸம் செய்கிறார்களோ, அல்லது வத்ஸை தனக்கு தக்கவரன் வேணுமென்று ஈச்வரனைக்குறித்து கடோரமாய்த் தவம்புரிய அதனைக்கண்டு இவர்களும் தபத்தி லமர்ந்துவிட்டார்களோ, ஒன்றும் தெரியவில்லை. ப்ரதான். தாமோதின ப்ரதி லிகிதம்கொண்டுவந்து இதோவருகிறாளதோவருகிறாளென்றுதெரிவிக்கிறசங்கதிகளெல்லாம் நான் பொய்யெனவே அய்யமுறுகிறேன்.

மந்த்ரி—மஹாராஜ். தாம்புத்ரிபோயிருக்கிறாளென்கிறஏக்கத்தினாலே நான் நாடோறும் சொல்லுகிறசமாசாரம் தீர்ம் செவ்வையாய் செவிகொள்ளாது துக்க ஸாகரத்திலாழ்ந்து மிக்க தத்தளிக்கின்றீர். நேற்றையதினம் வந்த லிகிதத்தில் புத்ரி ஏதோ இன்றையதினம் தமது பேட்டிக்கு வருவதாக வரைந்திருக்கிறது ; அப்படியே ஆகுமென நான் நம்புகிறேன்.

N. B. இவ்வார்த்தைகள்நடந்துகொண்டிருக்கையில்நாரதர்ப்ராப்தமாகவேண்டும்.

நாரதர்—பாரங்கே த்வாரபாலகன் (బందాహారీ హలుం(సాయిం) ద్వారకావాసా దేవుమారా భూపతి (సభా మోరా జ్యకార్యార్థమై ఉండు (హరే) ఘోటమ్మా—హం ఆయుం హాయేక హలు (రాజేస్సాయిం)

சேவகன்—மஹாராஜ். நமஸ்காரம் சேஸ—கொண்ட்டானு. (K. or. Pr என்ன) நாரதமஹரிஷி வந்திருக்கிறார்.

இராஜா—ப்ரதான்ஜி—ப்ரபுவின்ஸ்வாரி வந்திருக்கின்றதாம். சீக்கிரம் வாரும் எதிர்கொண்டுபோயழைத்துவரலாம்.

N. B. இராஜன் மந்த்ரி ஸஹிதமாய்வந்து அவரைப்பணிந்து ஆசீர்வாதம்பெற்றதின்பின் அவரைக்கொண்டுவந் தாஸனத்திருத்தியபிறகு.

இராஜா—ப்ரபோ மஹாராஜ். பரமஸாதுவாகிய தாம் இவ்விடம் வரப்பெற்றது யான் முன்செய்தமாதவமோ, அல்லது என்னகரம்செய்தவப்பேறோ, அல்லது என்முன்னவர்க ளியற்றிய ஈச்வர ஆராதனையோ, எந்த புண்ணியத்தின் பலனோ நானறியேன். தன்னியர் தன்னியர் தன்னியராயினேம் நானும் என் னகரவாஸிகளும்.

நாரதன்—இராஜா ஏன் என்னை இவ்வளவாக வர்ணித்துப்பேசுகின்றாய் நானோகேவலம் ஏழைப்ராம்ஹணன் உன்னைப்போலொத்தமஹாராஜாக்களா யிருக்கப்பட்டவர்களிடம் என்னைப்போலொத்த விப்ரர்கள் நித்யஷாவருவது ஸாதாரணந்தான் ராஜா.

இராஜா—மஹாராஜ். அதுமெய்யே, ஆயினும் இவன்ஜன்மாந்த்ர சுகிர்தம் செய்தபுண்யவந்தனுயிருந்தாலன்றோ தம்போலொத்த மஹான் பரமஸாதுக்களுடைய சேவைகிடைக்கும் இல்லாவிடிலெப்படி கிட்டும் ப்ரபோ.

நாரதர்—இராஜா நான் ஸாதுவல்ல நீஸாதுவானதினாலேதான் என்னை ஸாதுவென்கிறாய் பார் ஸர்ஜனர்களுக்கு யாவரும் ஸர்ஜனராகவே தோற்றுவார்கள் துர்ஜனர்களுக்கியாவருந் துர்ஜனர்களாகவே தோற்றுவார்கள். ஆகையாலேதான் நீ என்னை ஸாதுவென்கிறாய்.

இராஜா—மஹாராஜ். அத்திருவாக்கினுக்கு எதிர்வாக்கு சொல்ல இஜ்ஜடமதிகள் ஸக்யர்களா. தம்முகத்தினால் யாருக்குப் பெருமைகொடுக்கின்றீர்களோ, அவன் கேவலம் பதிதனாயினும் பாவனமடைந்த ப்ரபுவேயன்றி வேறில்லை. அடிகளிடத்தில் இவ்வடிமையின் வினவுதலொன்றிருக்கின்றது. ஆக்ஞையாயிற்றானால் சொல்லுகிறேன்.

நாரதர்—இராஜா உனக்கென்ன கேட்கவேண்டியதோகேள்.

இராஜ—மஹாராஜ் தாமோ திரிலோகசுமனி—எங்கேனும் யாதேனும் விசேடமிருந்தால் தாசனுக் கொருமுறை கதனிக்கவேண்டும்.

நாரதர்—இராஜா|| கவனித்துக்கேள் காலமே எழுந்திருந்து ஸ்நாநஸந்தியாதிமுதலிய சட் கர்மங்களின் ஆசரணைகளை முடித்துவிட்டு இந்த ப்ரம்ஹவீணையை புஜத்திற் றரித்து ஸ்ரீபரமேச்வரனுடைய குணானுவாதங்களை வர்ணித்துக்கொண்டே சத்தியலோகமேகினேன். ஹாஹாஹா ராஜா என்னசொல்லுவேன் அந்த சத்யலோகத்தினழகைப்; பிதா ப்ரஜோத்பத்தி செய்கின்றார்; ஸரஸ்வதிமாதோஸ்ரீ க்ரீடை செய்கின்றாள். நான்கு வேதங்களும் மூர்த்திகரங்களாய்நின்று கொண்டிருக்கின்றன, ஸநகஸநந்தனஸநத்குமாரர்முதலான யோகீச்வரர்களெல்லாம் என் பிதாவை வர்ணிக்கின்றார்கள், இப்பேரழகால் பேரானந்தங்கொண்டவனாய் அதைவிட்டு வைகுண்ட்டத்திற்குச்சென்றேன். ஹாஹாஹா ராஜா என்னென்றியம்புவேன் அந்த வைகுண்ட்டத்தின் மஜாவை ; ஜெயவிஜயாள் ஸ்ரீமன் நாரணனுடைய குணானுவாதங்களை வர்ணித்துக்கொண்டே ஆனந்த ஸாகரத்தில் மூழ்கியிருக்கின்றார்கள். மஹாவிஷ்ணு சேஷன்மீது பள்ளிகொண்டிருக்கிறார் லக்ஷ்மிமாதோ ஸ்ரீயும் பூதேவியும் பாதசேவைசெய்கின்றார்கள், இத்திருக்கோலத்தை அவலோகித்து மஹதானந்தங்கொண்டேன். பின்பதைவிட்டு கைலாயத்திற்குச்சென்றேன். ஹாஹாஹா ராஜா அடேஎதென்றெடுத்துரைப்பே னந்த கையிலாயத்தின் மகிமையை. நந்திப்ருங்கி முதலான முப்பத்துமுக்கோடிதேவர்களும் இன்னுமனேகமான பூதப்ரேதபிசாகணங்களும் ரிஷிகணங்களும் முனிவர்கூட்டங்களும் ஸ்வயம்புவாகிய பரமேச்வரனுடைய குணங்களை பலவாறாய் வர்ணிக்கின்றனர், பார்வதி மாதோஸ்ரீ ஈச்வரனுடைய வாமபாகத்திலுட்கார்ந்திருக்கிறாள், பஞ்சானனமூர்த்தியாகிய பரமேசன் மனமகிழ கஜானனுஞ் சடானனும் தாண்டவ நாட்டியம் செய்கின்றார்கள். இந்த மஜாவை யவலோகனம் செய்து என் ஜீவனுக்கு மஹதானந்தஸுகமுண்டாயிற்று பிறகு அதைவிட்டுநீங்கி பூலோகத்திற்கு வந்தேன் வந்தவிடத்தில் உன் கீர்த்திப்ரதாபத்தைக் கேள்விப்பட்டுன்னையும் பார்த்துச் செல்லலாமென்றிங்கு வரப்புகுந்தேன். அவ்விதமே உன்னைப் பார்த்தேன் கதனிக்கவொண்ணாத களிப்புமடைந்தேன்.

இராஜா—ப்ரபோமஹாராஜ். இப்பாமரனுடைய கீர்த்தியைக்கேள்விப்பட்டா இவண்ப்ராப்தமானீர்கள். பரதுக்கம் சஹியாத பரமபுருஷாளான தங்கள் சேவை எனக்குக் கொடுக்க வேணுமென்று அத்யன்த்தம் அன்புகூர்ந்து இவ்விடம் வந்ததாகச்சொன்னால் என்மன நோமென்று இப்படிப்பட்ட பெருமை கொடுத்தீர்கள் அஹந்தன்யோஸ்மி. நான் தன்யனுயினேன். பெரியோர்களாகியதம்முகத்தால் நான்கீர்த்திமான்என்று பெயருற.

N. B. இந்தசமயத்தில் ஸாவித்ரி வந்து தந்தையினடிபணிந்து நாரதருக்கும் நமஸ்காரம் பண்ணவேண்டும். இருவரும் ஆசிகூறவேணடும்.

நாரதர்—இராஜா இப்பெண்ணார்.

இராஜா—மஹாராஜ். தம்போலொத்த மஹான்களுடைய பூர்ணஆசீர்வாதத்தாலும், என்தவப்பேருக்கு மனமகிழ்ந்து எனக்களித்தஸாக்ஷாத்ஸாவித்ரி தேவியின் வரப்ரஸாதத்தாலும் என்னுதரத்திற் பிறந்தகன்யாரத்னமிவள்: இவளுக்கும் அந்தஸாவித்ரிதேவியின் பெயரே இட்டிருக்கின்றேன்.

நாரதர்—அஸ்து ராஜா. இம்மகள் இப்பொழுது எவ்விடம் போய்வருகின்ருள். இன்னும் ஏன் இவளுக்கு கல்யாணம் செய்விக்காமல் வைத்துக்கொண்டிருக்கிருய்.

இராஜா—பகவன். நானிவளது படமும் குணதிசயங்களடங்கிய வரலாறும் ஒவ்வொரு தேசத்தரசர்களுக்கு மனுப்பியும், அவர்களில் ஒருவரேனு வந்து மணம்புரிந்துகொண்டாரில்லே. அந்தக் காரியத்தினிமித்தமே தானுக ஒரு வரனைத்தேட இம்மகள் இப்பொழுது தேசசஞ்சாரம் செய்துவந்தாள்.சமயத்தில் தேவரீரும் இங்கு எழுந்தருளியிருக்கின்றீர்கள்; இது அடியேனுடைய பாக்ய விசேடமே. இவள் வரித்துவந்த பர்த்தாவை தேவரீர் சற்று விசாரித்து அவருடைய குணதிசயங்களை அடியேனுக்குத் தெரிவிக்கவேண்டுகிறேன். வதஸே. யாரை வரித்துவந்தையோ அப்படிப்பட்டவரை ஸ்வாமிராஜன்கேட்க ஒருமுறை தெரிவி.

ஸாவித்ரி—பிதா. என்னென்று சொல்லப்புகுவேன் நான் வரித்துவந்த புருஷனுடைய குணங்களையும், அவனதுசெய்கைகளையும், அவன் தகுந்த புண்யவானுனதினுலேதான் அவன்விஷயந் தம்மிடத்தில் வந்

துநான் கதனிக்கப்புகுந்தருவாயில் இப்படிப்பட்ட மஹான் தமக்கு சேவை தந்திருக்கிருரென எண்ணுகிறேன். இப்படிப்பட்ட மஹான் களுக்குமுன் வர்ணிக்கத்தக்க யோக்கியமுடையவன்ருனே யன்றி வேறில்லே. "నాస్త్యుదకసమం స్నానం నద్యాదస్యా పరంవ్రతం నగాయత్ర్యాః పరం మంత్రం నమాతుర్దై వతంపరం॥" என்றபடி அன்னேயும்பிதாவும் முன்ன தெய்வமென்றறிந்து அந்தகர்களாகிய தன் தந்தைதாயார்களுக்கு வந்தனவழிபாடுகளுடன் சந்தோஷமுண்டாக்குகிற அந்தமுள்ள அச் சிறுவனுடைய பேரழகையும், அவ்வழகுக்கேற்ற குணங்களேயும், அ க்குணங்களுக்கேற்ற நன்னடையும், அன்னடைக்கேற்றஇன்சொல்லு ம்அவ்வின்சொற்கேற்ற சாந்தியும், இந்த ஒருமுகத்தால் நான்வர்ணி க்க அசக்தியாயிருக்கின்றேன்.

இராஜன்—வத்ஸே. வரனே வர்ணித்துச்சொன்னுயேயன்றி அன்னவ னின்னுனென்றவன் ஊரும் பேரு முரைத்தா யில்லே எனதனே மறந்தனே.

நாரதன்—மெய்தான் பாலே அப்படிப்பட்ட புருஷனுகவன்.

சாவித்ரி—ஸ்வாமின்—ஸால்வதேசாதிபனுன த்யூமத்ஸேனனென்னும ரசனேத் தாமறிந்திருக்கலாம்; அவருடைய குமாரன் மிகச்சிறியவனு யிருக்கையிலேயே அவ்வரசருக்கு ஏதோகாலகதியால் கண்கெட்டுப் போயிற்று, அத்தருணங்கண்டு பகைவர் அந்த ராஜ்யத்தைப் பிடுங்கி க்கொண்டு அவரை மனேவிமக்களுடன் அடித்துத் துரத்திவிட்டா ர்கள். பின்பவர் தம்மிளங் குழந்தையோடும் இல்லக் கிழத்தியான தன் தர்மபத்தினியோடும் மஹரிஷிகள் வாஸம்செய்யும்தபோவனம் வந்துசேர்ந்து அங்கு அம்முனிவர்களோடுகூட வஸித்துக்கொண்டி ருக்கின்றனர். நகரத்திலே பிறந்துதபோவனத்தில் வளர்ந்த அந்தரா ஜரிஷியினுடைய புத்ரரான ஸத்யவான் என்பவரே எனக்கேற்ற பர் தாவென நான்மனதினுல்வரித்தது அதைத் தங்களிடம் தெரிவிக்க வ ந்தேன்.

இராஜா—ப்ரபோமஹாராஜ். கன்னிகை தனக்குள்ளே தாளே தனக் குத்தக்கவரனென்று நிச்சயம்பண்ணிவரித்துவந்தஅவ்வரன் இம்மக ட் கேற்றவன்ருனு:

நாரதர்—ராஜன் இம்மகள் அறியாமையினுலே ஸத்யவானேவரித்து வந் தாள் ஆயினு மவன் அற்பமானவனல்ல "బాలస్యాస్యాః ప్రియస్యాస్య

16

కల్పో శ్వాంశ్చమృణ్మయాన్ చిత్రేపి విలిఖత్యశ్వాం చిత్రాశ్వ ఇతిచోచ్యతే" பாலயத்தில் குதிரைசவாரி செய்வதில் அத்தியந்தம் பிரியமுடைய வனுதலாலும், குதிரைப்படம் எழுதுவதில் கைதேர்ந்த வல்லவனுத லாலும், இவன் சித்ராச்வன்என்னும் நாமகரணம் பெற்றிருந்தான் பின்பு "సత్యంవదత్యస్య పితా సత్యం మాతా ప్రభాషతే తతోస్య బ్రాహ్మణాశ్చక్రు నామైతత్సత్యవానితి" அவனுடைய மாதாபிதாக்கள் எத்திசைக்கும் மெத்த புகட்சியை உண்டாக்கும் ஸத்தியநெறி தவராமல் ஸத்தியமே பேசுவது பற்றி அவர்களுடைய உதரத்தில் இவன் பிறந்ததனுல் வே தப்ராம்ஹணர்கள் இவனுக்கு சத்தியவான் என்னும் பேர் கொடுத் தார்கள் அதுமுதற்கொண்டு அவனுக்கு சத்தியவான் என்கிற பேர் வழங்கிக் கொண்டுவருகின்றது இன்னும் இவன் எப்படிப்பட்டவன் செவ்வையாய்கவனி. "వివస్వానివ తేజస్వీ బృహస్పతి సమోమతౌ మహేంద్ర ఇవ వీరశ్చ వసుధేవ క్షమాన్వితః" எல்லாக் கலைகளும் கற்றுத் தேர ந்தவன், புத்தியில் அவனுக்கு எதிர் ஒருவருமில்லை, ப்ரஹஸ்பதிக்கு ச் சமானமாவன் வித்தையில் சேடனை ஒத்தவன், அழகில் அச்வினி தேவதைகளுக்கு ஒப்பானவன், "ఉత్సాహం సాహసం ధైర్యం బలంబుద్ధిః పరాక్రమం షడేతేయత్రతిష్ఠంతితత్ర దేవోపితిష్ఠతి" என்றபடி தேவர்களும்விரும்பி மெச்சிக்கொண்டு நேசிக்கத்தக்க வீரியதைரியபராக்ரம சத்யதானத ருமஉதாரத்வஉத்ஸாஹத்வபரோபகாரமுதலிய பலநற்குணங்களும் அவனிடத்தில் குடிகொண்டிருக்கின்றன ; ஆயினும் அவன் இம்மக ட்குக் கணவனுக உரியவனல்லன்: அவனைத் தவிர மற்றெவனையாவ து வரித்துவந்தால் அதிகநலமாயிருக்குமென வெண்ணுகிறேன்.

இராஜா—"అన్వైరుపేతం సర్వైస్తం భగవన్ ప్రబ్రవీషిమే దోషానప్యస్య మే బ్రూహి యదిసంతీహ కేచన" ப்ரபோமஹாராஜ் அன்னவனுடைய நன்னடை யையும் இன்னருங்குணத்தையும் எடுத்துரைத்து என்னை ஆனந்த ப்படுத்தி, கடசியாக என் கன்னிகைக்கு உரியவனல்ல வென்றீர்கள் என்னகாரணம் ; அப்படிப்பட்ட குணசீலனை விவாகஞ்செய்துகொ ள்ள என் புத்திரி தக்கவளல்லவென்று, அல்லதவன் அவ்வளவு குண ங்யனுயிருந்தும் இவளை வரிக்க யாதேனும் தோஷமுடையவன் என் று, செவ்வையாய் எனக்குவிளங்கச்சொல்லவேண்டும். அப்படிஎன் னதோஷ மவனிடத்தி லிருக்கின்றது.

நாரதர்—"ఏకఏవాస్యదోషోహిగుణానాక్రమ్యతిష్ఠతి సచదోషః ప్రయత్నేన నశక్యస్త్వా తివర్తితుం" ராஜா அத்யன்த்தம் மதுரமான ஒரு குடம்பாலில் ஓர் உப்புக்கல் விழுந்தால் எத்தன்மயாய் விகாரமடைந்து உபயோகப்படாதுபோகுமோ, அதுபோல செப்புவதற்கரிய ஒப்புவமையில்லாத சத்தியவான் கேவலம் தோஷரஹிதமான குணதுல்யனயிருந்தபோதிலும், எவவிதத்தாலும் மாற்றப்படாத ஒருதோஷமுடைத்தாயிருக்கின்ருன். தன்னிமித்தமே அவனைத்தவிரவென்றேன்.

மஹாராஜ்—இப்படி குப்தமாய்ச்சொன்னல் நானறிய அவ்வளவு வல்லேனல்லேன்.

நாரதர்—ராஜா கவனித்துக்கேள். "ఏకోదోషో స్తినాన్యోస్య సోద్యప్రభృతిసత్యవాన్ సంవత్సరేణక్షీణాయు దేహన్యాసంకరిష్యతి" அவனுக்கு மாற்றப்படாத ஒரு தோஷமுண்டென்றேனே, அதாவது அவன் அல்பாயுவாகப் பிறந்திருக்கின்ருன். இன்னம் ஒருவருஷகாலந்தான் அவ்விளவரசன் இப்பூமியில் ஜீவித்திருப்பான் விதியைவெல்லயார்தாம் அதிஞற்ருனவனைவேண்டாமென்றது.

N. B. இதுகேட்டவுடன் ராஜன் மூர்ச்சித்து கீழேவிழவேண்டும்.

இராஜா—ஒருமினிட் கழிந்தெழுந்து அழுதுகொண்டு. மஹாராஜ் இன்னேரம் வரையில் என்கர்ன்னத்திற்கு இன்னமிர்தமான வசனம் சொன்னீர்கள்; பின்னர் சொன்னமொழியினலே கோடை யிடியைக்கேட்ட பன்னகம்பொல நடுங்கிக் கின்னமுறச்செய்தீர்கள்; என்னசெய்வேன் மஹாராஜ்,ஸாவித்ரியைப்பார்த்து. "ఏహిసావిత్రి గచ్ఛస్వ అన్యంవరయశోభనే తస్యదోషో మహానేకో గుణానాక్రమ్యచస్థితః" வத்ஸேஸாவித்ரி.பெண்களுக்குத் !தக்கபுருஷர்களைப் பார்த்துத் தேடிகல்யாணம் செய்விப்பது பெற்ருேர்களுடையபொறுப்பேயன்றி பெண்களுடைய இஷ்டமல்லவென சாஸ்த்ர முறையிட்டிருப்பதை நான் அறிந்திருந்தும், என் நண்புக்குறிய உன்விஷயத்தில் அப்படிகூடாதென உன் அபிப்ராயத்திற்கேற்ற கணவனைத் தெரிந்துவரச்சொன்னதற்கு வத்ஸே நீபோய் சத்தியவானை வரித்துவந்தாய்! அவனிடத்திலோ அசக்யமான தோஷமிருக்கின்றது, இதனல் நீ மற்ருெருகணவனை வரித்து வருகிறதே நலமாகத் தோற்றுகிறது. நீ வேறு நாயகனையே தேடவேண்டும்.

சாவித்—தாதமஹாராஜ் தமது வார்த்தைக்கு பங்கம்வரலாகாது என்றகருத்தோடு அனேகமான புண்யதீர்த்தங்களும் திவ்யஸ்தலங்களும் சேவித்துக்கொண்டு எனக்குத்தக்கவரன்கிடைக்காதபடி கடசியாக சத்தியவானே அடியாளுக்கேற்றபர்த்தாவென்று நான்முதலில் மனதினால்வரித்து விட்டிருக்க இப்பொழுது அதைவிட்டு மறுபடிமற்றவனைத்தேடுவதும் வரிப்பதும் எப்படி செய்யலாம். அதுதம் முதாதில் பிறந்தவும் நாரதமஹாரிஷியோருடைய தரிசனைபெற்றவுமான எனக்குயோக்கியமா அக்காரியம்நானொருக்காலும் செய்யேன்.

இரா—என்னருமை பெருமைக்குறியபாலே. சத்யவான் உனக்கெவ்விஷயத்திலும் ஒப்பற்றக் கணவ னென்பதற்கு ஐயமில்லை, ஆயினும “యథా మేభగవా న్నాహ నారదో దేవసత్కృతః సంవత్సరేణాల్పాయు దేహన్యా సంకరిష్యతి” என நாரதபகவான் அவன் ஆயுள்குறுகிப்பிறந்திருக்கின்றான் இன்னும் ஓராண்டளவே அவன் உயிரோடிருப்பான், என்று சொல்லுகின்றாரே, சந்த்ரசூர்யர் கதிதப்பினும், ஸாகரம்சத்தியம்ப்பி தரணியை முழுகப்பண்ணினும், ஸாதுக்கள் வாக்கினின்று பொய்யொன்றும் வராதே; அப்படி அவன் இறந்தபிறகு நீ கணவனை இழந்த கைம்பெண்ணாகவன்றோ ஆகவேண்டும். அந்ததுக்கத்தை நான் எப்படி சகிப்பேன். வத்ஸே பெண்களுக்குப் புருஷனே பூஷணமாம் பார். “தாயோடறுசுவைபோம் தந்தையொடுகல்விபோம் சேயோடு தான்பெற்ற செல்வம்போம், ஆயவாழ் உற்றாருடன்போம் உடற்பிறப்பாற் றோள்வலிபோம் பொற்றாலியோடெவையும்போம்” என. புருஷன் இறந்தபிறகு பெண்சாதிகளுக்குள்ள எல்லாச் சிறப்பும் போய்விடும் அப்படிக்கிருக்கையால் இந்த கல்யாணத்தை நான் எப்படிசம்மதிப்பேன். “பேதமை என்பது மாதர்க்கணிகலம்” என்பதுபோல, நீ சிறுமியானதுபற்றி பேதைத்தனத்தால் உன்னுடைய நன்மையைக்கூட நீ உணராதிருக்கின்றாய், பெண்கள் பசுமையாய் இருந்தால்தான், பெற்றோருக்குப் பெருமை உண்டாகும், பெண்கள் வருந்தின லவர்கட்கும் வருத்தமே: ஆனதுப்பற்றியே பெற்றோர் பெண்களுக்குத்தக்க கணவனைத்தேடி காலாகாலத்தில் கல்யாணம் செய்விக்கின்றனர். அப்படிக்கிருக்க விஷம்கொல்லும்வஸ்துவென்று தெரிந்தும் பானஞ்செய்வதுபோல உடனே இறந்துபோகிறவனென்று தெரிந்திருக்க அவனுக்கெப்படி உன்னை என்மனந்துணிந்துவிவா

கஞ்செய்துகொடுக்கலாம். ஆதலின் மாதாபிதாக்களுக்கு மனவருத்த முண்டாக்கத்தக்கவிஷயத்தில் வீண்பிடிவாதம்பிடித்து பெறறோர் உரையை எதிர்க்காதே, "தந்தைசொல்மிக்க மந்திரமில்லை" என்பதை சந்தேஹமற நீயறிந்திருந்தும் இந்தவிஷயத்தில்மந்தபுத்தியாயிருப்ப துஎந்தமசிந்தையைசோகப்பண்ணுகிறது. உனக்குசுயம்வரமேசெய்து கொள்ளவேண்டுமெனவிருப்பமுளதாயின், முன்னுனக்குவரவழை த்துக்காட்டியபடங்களிலுள்ள தேசதேசத்து இளவரசரனைவரையும் நேரே இவ்விடத்திற்குஎந்தவிதமாயாவதுவரவழைக்கின்றேன் அவர்க ளுக்குள் உன்னபிப்ராயத்திற்கேற்றமன்னவனை இன்னனென்றுசொ னனுயேயாயின் அன்னிமிஷமே அன்னவன் உன்னைவரிக்கும்படி என் னவாகிலும் செய்து என்னால் கூடிய பிரயாசை எடுத்துக்கொள்ளுகி றேன் வாழ்நாள் குறுகிய சத்தியவானை இனிநினையாதே.

சாவித்ரி—ரிஷிபுங்கவ சமுகத்தில் அடியாள் சொல்லப்புகும்வார்த்த யை தேவரீரும் தயைசெய்து கவனிக்கப்ப்ரார்த்திக்கின்றேன். தாதமஹாராஜ் தேவரீர் தர்மசாஸ்திர ப்ரவீணராய் சகலவிதமான நீதிஞா யங்களை உணர்ந்தவராயிருந்தும் இவ்வண்ணமுபதேசிப்பது தகுதிய ன்று; காரணம். "సకృదంశో నిపతతి సకృత్కన్యా ప్రదీయతే సకృదాహ దదానీతి త్రీణ్యేతాని సకృత్ సకృత్" ஒருவனுக்கு ஒன்றுகொடுக்கிறேனென்பதும். ஒருவனைக் கணவனாக வரிப்பதும் ஒரேதரம் செய்யவேண்டுவதேய ன்றி, மாறிமாறிப் பலதரம் செய்யத்தக்கதல்ல. "దీర్ఘాయురథవాల్పాయు స్సగుణో నిర్గుణో౽పివా సకృద్వృతో మయాభర్తా న ద్వితీయం వృణోమ్యహం" தீர்க்காயுவாகட்டும் அல்லது அல்பாயுவாகட்டும் சுகுணனாகட்டும், அதவாதுர்க்குணனாகட்டும், முதலில் எந்தபுருஷனை நான்வரித்தே னே அவனே எனக்குக்கணவன் அவனைவிட்டு மற்றொருவனை நான் ஒருபொழுதும் வரியேன். "మనసా నిశ్చయం కృత్వా తతో వాచాభిధీయతే క్రియతే కర్మణా పశ్చా త్ప్రమాణం మే మన స్తతః" தலில் ஒருகாரியத்தை மன தினால் நிச்சயித்து, பின்பு அதைவாயினாற்சொல்லி, பிறகு அதைச்செ ய்வதே உலகவழககம்; ஆதலின் நான்மனதிற்செய்த நிர்ணயத்தைமா ற்றுவது நியாயமன்று: நான்கைம்பெண்ணாகி கலங்க வேணுமென்ப து என்தலைவிதியாயின். அதைமறுபடி மாற்றயார்தாம் இவ்வுலகில் ஒன்றும் நித்தியமானதன்று "குடம்பை தனித்தொழிய புட்பறந்த தற்றே உடம்பொடுயிரிடைநட்பு," இந்தபூமியின்கண்பிறந்தவன் இன்

றைக்காயினும், இன்னும்நூற்றாண்டு கழிந்தாயினும் இறக்கவேண்டியவனே யல்லாமல் அவ்விறப்பினுக்குத்தப்பி நிற்பவனெவனுமில்லை. அப்படிக்கிருக்க அதற்குதாமேன் அஞ்சுகிறீர்.

நாரதர்—சபாஷ் வத்ஸே பாலே—உன்னமிர்தமானவார்த்தையைக்கேட்டு அத்தியந்த மனமுவந்தேன். ராஜா. இவ்வணங்கினுள்ளஞ் சத்தியவானிடத்திலேயே உறுதியாய் லயித்துப்போயிருக்கின்றது இந்த நீதி உறுதிப்பாட்டினின்றும் இவள்மனதைத்திருப்ப எவராலும்சக்கியமில்லை ; சத்யவானவ்வளவு சற்குணபுருஷன் இவ்வுலகில் வேறொருவனுமில்லை. ஆகையால் அவருக்கே இம்மகளைக் கொடுப்பது எனக்கும் யுக்தமாகவேதோற்றுகிறது.

இராஜா—கைகூப்பிக்கொண்டு. ப்ரபோமஹாராஜ், பூதபவிஷ்ய வர்த்தமானமாகிய திரிகாலத்தையும் ஞானத்ருஷ்ட்டியினலறியவல்லவராகிய தாம்,வத்ஸையினுடைய அபிப்ராயத்திற்கிணங்கி அவளுக்கனுகூலமாய் சொல்லியருளிய இந்தபகவத்வாக்யத்தைநான் சிரஸாமாங்யம் செய்துகொண்டேன் தேவரீரது கட்டளைப்படியே அம்மகளது எண்ணத்தைமுடிக்கின்றேன். தேவரீரும் திருவாய்மலர்ந்துஇம்மகட்கு பூர்ணாசீர்வாதம் செய்யக்கோருகிறேன்.

நாரதர்—இராஜா இந்தகுணபூஷணிகொண்ட எண்ணமானது அவிக்னமாய்முடியட்டும்; இம்மகட்கு க்ஷேமைச்வர்யஸந்தானசம்பத்தும் மங்களமுமுண்டாகுக. நான்வந்து வெகுநேரமாயிற்று,இப்பொழுது விடைபெற்றுக்கொள்ளுகிறேன்,

இராஜா—வந்தனம்பண்ணுகின்றேன் மஹாராஜ் (கல்யாண்) அடிக்கடி வந்து இத்தாசனுக்குதரிசினை கொடுக்கவேணும் (அப்படியே)

சாவித்ரி—ப்ரணிபதனம் செய்கின்றேன்ப்ரபோ (கல்யாணவத்ஸே) இத்தாசியின்மீது தமது பூர்ணகிருபை யிருக்கவேண்டும் (அஞ்சற்கவத்ஸே என்பூர்ணகிருபை உன்மீதிருக்கின்றது. நீ யிப்பூவுலகில் யாவராலும் மகிமைபடுத்தத்தக்க பதிவ்ருதாசிரோமணியாவாய்)

N. B. சூத்ரதாரன் பாட நாரதர் போகவே அரசன் மந்திரியை அழைத்து.

இராஜா—ப்ரதான் நான் அற்பாயுவான சத்யவானைவேண்டாமென்றும் வத்ஸே கேட்காதடம்பிடித்ததால்,நாரதபகவானும் அவள் எண்

ணப்படியே முடிக்கக்கட்டளைகொடுத்தருளியிருக்கிறார். ஆகையால் ஸ்வயம்வரத்திற்காகவேண்டியவிஷயங்களையும், ஸாமக்ரியைகளையும் தயார்ய்யும். வத்ஸே வா இப்பொழுதே குருராஜனைவரவழைத்துப் பயணத்திற்கு முகூர்த்தம் நியமனம்செய்யசொல்லுகிறேன். நீ பார்த்து வரித்துவந்த ஸத்யவானிடத்திற்குச்செல்லலாம். ப்ரதான்—நம கோஷாவிற்குள்ளிருக்கும் ராஜஸ்த்ரிகளுக்கெல்லாம் தந்தச்சிவிகை தயாராகட்டும் வத்ஸே வாபோலாம்

N. B. படதாவைவிட்டுவிடவேண்டியது. 5 மினிட்வரையில் பாட்டு முதலிய வாத்தியக்கருவிகள் நடத்தவேண்டும்.

ACT III.

மூன்றும் அங்கம்.

N. B. த்யூமத்சேனமஹாராஜனும் அவர் பத்நியும் ஆரணத்திலிருந்து தாங்கள் பூர்வமிருந்த ஸ்திதியைப் பேசிக்கொண்டிருக்கவேண்டும்.

இராஜா—பிரியசகே புத்ரன் கந்தமூல பக்ஷணங்கள் கொண்டுவரப்புகுந்தானே வந்தனனு.

இராணி—இன்னும் வரவில்லை ப்ராணநாத், இப்பொழுது வந்துவிடுவான்.

இராஜா—பிரியஸகே. ஒவ்வொரு சமயங்களில் வத்ஸன் வருகிறதற்கு நாழிகையாய்விடுகிறது. நம்மிருவரையும் தனியாய் இந்த ஆரண்யத்தில்விட்டு கந்தமூலாதிகளுக்குப்போய்விடுகின்றான். எந்தவேளையில் துஷ்ட்ட மிருகங்களுக் கிரையாகிறோமோ தெரியவில்லை.

இராணி—ப்ராணநாத் துஷ்ட்ட மிருகம் நம்மை நம் புத்ரசிகாமணி நமக்கிருக்குமளவும் தொந்திரவுசெய்யுமென்று பயப்படவேண்டாம்.

இராஜா—பிரியதமே. நாம் துஷ்ட்ட மிருகங்களுக் கிரைபடுவோமென்கிறதுக்கங்கூட எனக்கில்லை; காரணம்,எப்பொழுது கண்கெட்டோமோ அப்பொழுதே நமக்கு ஜெகம்போய்விட்டது. நமக்காக ஏகாங்கியாய் அலைந்துதிரியும் புத்ரனுக்கு ஏதேனும் ஹானி நேரிட்டால் பிறகு நாம் என்னகதியடைவோமோவென்கிற பயம் உண்டாகிறது.

இராணி—ப்ராணநாத் இவ்வளவு நம்மை பரிசோதித்ததே பரமாத்மாவுக்கு த்ருப்தியாயிருக்கும் இனியும் சோதிப்பாரென்று நான்நினைக்கவில்லை.

இரா—(அழுதுகொண்டு)பிரியதமே. பார் நாம் பூர்வஞ்செய்த சஞ்சிதவாஸனையினாலே எண்ணுதற் கருமையான இந்த மானிடதேஹமெடுத்து அதிலும் நால்வராலும் பூஜிக்கப்பெற்ற ராஜனாகப் பிறந்து முற்பிறப்புகளின் கர்மவாசனையினாலே கண்ணிழந்தது மல்லாமல் மண்ணிழந்து வனம்புகுந்து வருந்தவேண்டி நேரிட்டிருக்கிறது. இவ்விதமாக பூர்வம் யாருக்கு என்ன ஹிம்சை கொடுத்தோமோ, மனப்பூர்ணமாய் நாம் கொடுக்காவிட்டாலும் நம்மால் செய்யப்பட்ட சட்டதிட்டங்களால் யார் யார் என்னதொந்திர வடைந்தார்களோ, அல்லது குரு, தெய்வ அதிதி, ப்ராம்ஹண விசுவாசமில்லாது அவர்களை நிந்தித்தடித்துத் துரத்தினோமோ, அல்லது பிரஜைகளுக்கு நீதிநியாயம் சரிவர சொல்லாது ஓரவஞ்சகம் செய்தோமோ அதின் பலன் இப்படி நேரிட்டது. பிரியதமே "செங்கோல்கோணினெங்குங்கோணி சிதறுண்டவன் குடிக் கதறக்கதற, இங்குமங்குமெங்கும் புகழிழந்தீங்கு கண்கெட்டு ஏங்குவன் மன்னனே" என்னும் இவ்வாக்யம், நான் எத்தனையோ சத்தியத்தோடு இத்தலத்தைப் பரிபாலித்தும், எனக்கே உரிமையானதே என்கிறதுக்கம் உண்டாகிறது ப்ராணசகி.

இராணி—(அழுதுகொண்டு) மஹாராஜா நாம்கூடியவரையில் புண்யம் செய்தவரானதினால்தான் இம்மண்ணுலகில் பெண்ணிலாக்யாதிபெற்றீர் கடசியாக இப்பெண்பாவியை நம்பிசித்துவிவாகம் செய்துகொண்டதினால் கண்கெட்டுக் கதறும்படி நேரிட்டது ப்ரபோ.

இரா—(துக்கத்தோடு) பிரியே நீயேன் உன்னை நிந்தித்துக் கொள்ளுகிறாய் உன்னை நான் விவாகம் செய்துகொண்டேனென்றாகிலும் இந்தக் கண்களிழந்தகாலத் துதவிசெய்து ஆதரிக்க சத்தியவானை புத்திரன் பிறந்தான் இந்தச் சண்டாளனுக்குநீ பெண்டாயினை என்று நீயுங் கண்ணிழந்தாயே யன்றி வேறில்லை.

N. B. இப்படி பேசிக்கொண் டிருக்கையில் சத்தியவான் வந்துசேரவேண்டியது.

சத்ய—மாதோஸ்ரீ, தாதமஹாராஜ! ஏன் தாமிருவரும் கண்கலக்கப் பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். பிதா நான் தினந்தோறும் வருகிறதைவிட இன்று கிஞ்சித் காலதாமதம் செய்து வந்தேனென்று, அல்லது காய்கனி கிழங்குகள் கொண்டுவரப்போன விடத்தில் எந்த துஷ்டமிருகத்திற்காவது பக்ஷணமாயிருப்பேனென்று, அதவா நாம் முன்னிருந்த ஓர் ஸ்திதிக்கு சாலக்தியினலே நமக்கு இப்படிப்பட்ட ஓர்கதி நேரிட்டதே என்று, எதினல் துக்கமுற்று கண்ணீர் சொரிகின்றீர்கள்.

இரா—பாலகா நாம் எதிரியினற்றேற்கப்பட்டு சகலசம்பத்திற்குமிடமாகிய் நாட்டைவிட்டு காட்டுக்குவந்து இவ்வவதிப்படுகிறோமே என்கிற துக்கம் லவலேசமும்மில்லை. ஆனல் வத்ஸா. பேருதவி தரும்படியான உன் சீருள்ள திருமுகத்தைப் பார்த்து ஆறுதலடைவதற்கு சண்டாளர்களாகிய எமக்கு கண்களில்லையே என்கிறதுக்கமே மேலாகின்றதே தவிர வேறில்லை.

சத்ய—தாத மஹாராஜ் தாம் சகலவிதமான தர்மங்களை அறிந்திருந்தும் தாமே இப்படி சோகப்படுவீர்களாயின் பேதமைதனத்தையுடைய என்மாதா எவ்வளவு விதனமுறுள் மஹாராஜ "గజభుజంగ విహంగమబంధనం । శశిదివాకరయోర్గ్రహపీడనం । మతిమతాం చ విలోక్య దరిద్రతాం । విధిరహో బలవానితి మే మతిః"॥ புருத்த தேஹத்தோடு கூடிய யானையும், பார்த்தவுடன் ஓடச்செய்யும் பாம்பும், ஆகாசமார்க்கமாய் சஞ்சரிக்கும் பறவைகளும், ஆகிய இவ்வைகளெல்லாம் பந்தனத்திற் குட்படுவதும் சந்த்ர சூர்யர்கள் ராகு கேதுக்களால் பீடிக்கப்படுவதும் இந்திராதி தேவர்கள் அசுரர்களாலே இடையூறுவதும் மேலான வித்வான்கள் வறுமையினல் பாதிக்கப்படுவதும், கர்மத்தை அனுசரித்த விதியினலல்லது வேறெதினலுமில்லை; துக்கமுறவேண்டாம், நாம்நாம் செய்ததை நாம் அனுபவிக்காமல் பின்னர் அனுபவிப்பது. மஹாராஜ் இதோ கந்தமூலாதிகள் கொண்டு வந்திருக்கிறேன் அருந்தி பசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

N. B.—தற்சமயத்தில் அச்வபதி ராஜன் ஸாவித்ரி, மந்திரி, ப்ராம்ஹணர்கள் முதலியோர் சேர்ந்து அங்கு வந்துநின்று, அம்மூவரையும் பார்த்து, ப்ராம்ஹணர்கள் தவிர மற்றபேர்களெல்லாம் த்யூமத்சேன ராஜாவை வலம்வந்து நமஸ்கரிக்கவேண்டும்.

த்யூமத்.—வத்ஸா யாரங்கே எனக்கு வந்தனம் தந்தது.

சத்ய.—மஹாராஜ யாரோ ராஜனைப்போலத்தோற்றுகிறார் அவரும் அவரோடு கூடவந்திருக்கிற மற்றவர்களும் தேவரீரைவலம்வந்து ஸேவிக்கின்றனர்.

த்யூம.—யாரங்கேவந் தெனக்கு வந்தனம் தந்தது.

அஸ்வபதி.—மஹாராஜ். மத்ரதேசத்திற் கதிபதியான இத்தேகத்திற்கனைவரும் அச்வபதி என்பார்கள். தம்மால் சில காரியங்களைனக்காக வேண்டியிருப்பதால் தம்பேட்டிக்கு வந்தேன்.

த்யூமத். அசுவபதிராஜ். தாமோ ஸகலராலும் பூஜிக்கப்பெற்றவர். சாக்ஷாத் ஜகதம்பிகையின் பூர்ண க்ருபைக்குரியவர்; அப்படிப்பட்ட புண்யவான் இந்த கண்கெட்ட சண்டாள பாபியைவந்து சேவிக்கப் புகுந்ததென்னே தெரியவில்லை. இருந்தபோதிலும் "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்குசுட்டாலும் தான்மிக்கவெண்மைதரும்" என்னும் பழமொழியை ஆசரித்து நான் பூர்வம் அரசனாக இருந்த ஓர்காரணத்தை மனதிலெண்ணி எனக்கித்தனை கனமும் மகிமையுங் கொடுத்தீர். அவ்வளவு மரியாதை செய்த தமக்கு நான் ப்ரதிமரியாதைசெய்து தக்க ஆசனங்கொடுக்க கண்கெட்டு காட்டில் நான்வாசம் செய்கிறபடியால் முற்றிலும் ஆசக்தனாயிருக்கின்றேன் இப்படி சமீபத்தி லுட்காரும். என்ன விசேடம் தாம் ஏழையாகிய என்பேரில் தயைசெய்து இவ்வளவு தூரம் வந்தது.

அச்வபதி.—மஹாராஜ். தாம் எனக்கு மரியாதையும் செய்யவேண்டுமா. தம்முடைய அன்பான குளிர்வசனமே போதும். நான் வந்த காரியத்தையும் சொல்கின்றேன். தாமதை தயைசெய்து கவனிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

த்யூமத். அச்வபதிராஜ கதனியும் தயைசெய்து ஒருவாறு, நான்கேட்கின்றேன்.

அச்வபதி.—"సావిత్రినామరాజర్షే కన్యేయంమమశోభనా। తాంస్వధర్మేణధర్మజ్ఞ స్నుషార్థేత్వంగృహాణమే" மஹாராஜ் ஜெகதம்பிகையின் க்ருபையினாலேயும் தம்போன்ற மஹான்களுடைய ஆசீர்வாதத்தாலும் எனக்குப் பிறந்த என் அன்பான கன்யாரத்நமாகிய சாவித்ரி என்னும் குமரி, தமதாத்ம புத்ரனாகிய சத்யவான்மேல்மனநாடி அவ

னையே விவாகம்செய்து கொள்ளவேணும் என்கிற அடம்பிடித்த படியால் அம்மகளையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கின்றேன். தாம் என்பேரில் தயைசெய்து தம்புத்திர ரத்தினம் என்கன்னி கையை வரிக்கச் செய்யக்கடவீர். இதுதான் என் இச்சை.

த்யூமத்.—“ చ్యుతాస్త్వ రాజ్యాద్వనవాసమాశ్రితా। శ్చరామధర్మంనియతాతపస్వినః। కథంత్వనర్హా వనవాసమాశ్రమే। నివత్స్యతేక్లేశమిమంసుతాతవ” ॥ ராஜன் “ அனிச்சப்பூக் கால்களையாப் பெயதாள் நுசுப்பிற்கு நல்லபடாபறை” என்னும் பாடலுக் கியைந்தவளாய் தம்முடைய உதரத்திற் பிறந்து அருமையாய் வளர்ந்து தம்முதலோருடைய அன்பிற்கு மியைந்து பலநன்னெறி ஒழுக்கங்களையு மறிந்தவளாகிய இம்மகளை மண் பொன் முதலிய செல்வப்பொருளுக்கும் எண் எழுத்துமாகிய கல்விப்பொருட்கும் உறைவிடமாகிய பேரரசோடுகண்போய் காடுபுகுந்து ரிஷியாச்ரமமடைந்து கந்தமூலாதி யருந்தி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற என்னிடம் கொண்டுவந்து என்னிளங்குமாரனுக்குப் பாணிக்ரஹணம் செய்துவைக்கச் சொன்னால் கேவலம் வறுமைப் பிணிக்குட்பட்டன்றோ வருந்தவேண்டும். அக்காலையில் இப்போதுறும் துயரத்தினும் அத்துயரம் எனக்குக கொடிதன்று.

அச்வபதி.—யோசித்துப் பார்க்குமிடத்துத் தனகன சம்பத்தையனுபவித்த தேவரீருடைய இடையூறினும் இம்மகள் அனுபவிக்கப் புகுகிறதுயரம் அவ்வளவுகொடிதன்று. இச்சுயம்வரவிஷயத்தில் என்னால் கூடியவரையில் யானும், நாரதபகவானால் கூடியமட்டும் வரும், எத்தனையோவிதம் சொல்லியும் கேளாது ஒரே அடமாய் தஞ்சிறுவனுக்கே இச்சிறுமி வாழ்க்கைப்படவேணுமென்று சொல்வதினாலே யானும் மனந்துணிந்து உத்தமனான நும்புத்திரன் சத்தியவானுக்கே இப்புத்திரியைக் கொடுக்க உத்தேசித்து இத்தலத்துற்றேன். ஆகையால் தேவரீர் அடியேனுடைய வேண்டுகோளிற் கிரங்கி என்மகளது மனோரதத்தைப் பூரணம்செய்ய வேண்டுகிறேன். பாருங்கள். “ సుఖంచదుఃఖంచభవాభవాత్మకం। యదా విజానాతిసుతాహమేవచ। నమత్స్వధేయయుజ్యతివాక్యమీదృశం। వినిశ్చయేనాధిగతోస్మితేనృప” ॥ ஸுகமின்னும் துக்கம் ஒருவரதுபங்கல்ல அவரவர்கள்செய்த நல்வினை தீவினைக்குத் தக்கபடி விதிக்கப்பட்டிருக்கி

றது. ஆம்பே தனைத்துமாகிறதையும் போம்போ தனைத்தும் போகிறதையும் எவரால் தடைசெய்து முடியும், இதனாலே தேவரீர் இவ்விஷயத்திற்கு மாறுதலொன்றும் சொல்லவொண்ணாது.

த்யூமத்.—பார்த்திப இவ்விதமான சம்பந்தம் நமக்கு அவசியம் கிடைக்கவேண்டுமென்று முதலில் நானே யோசித்ததுதான்; ஆயினும் இப்படிப்பட்ட பந்துவர்க்கம் நமக்கிருக்கலாகாதென ஈசனே எண்ணங்கொண்டு எமக்கிவ்வித அவஸ்தை உண்டாக்கின நிமித்தம் நாமே ஆரண்யத்தில் வந்து வருந்துகையில் இந்தப் பெண்ணையுங்கூட வருத்துவது யுக்தமல்லவென்று சிந்தித்திருந்தேன். இப்பொழுது நீங்களேவந்து வேண்டுகிறபொழுது எனக்குப் பழம்நழுவிப் பாலில் விழுந்ததுபோலாயிற்று. அத்தியந்த குதோஹலமடைந்தேன். உங்களிஷ்ட மெப்படியோ அப்படி நடத்த எனக்கு எவ்விதமான ஆக்ஷேபமு மில்லை.

சத்ய—பிதாமஹாராஜ்-தம்முடைய அன்பான கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க பாலகனுக்கு மாறுதல்சொல்ல இடமில்லை. ஒரு காரியம்செய்ய ஆரம்பித்தாலதனைத் தேறவிசாரித்து முன்பின் யோசித்துச் செய்யுங்கள்.

த்யூமத்.—வத்ஸா நானும் யோசித்தேன். ஆயினும் பார்மன்னனே நேரேவந்து நம்மை இவ்வளவாய் சீராட்டி மன்றாடுகையில் வேறுவிதமாய் நாம் நடத்துவோமேல் அது அவனை அவமதிசெய்ததற்கு ஒத்ததன்றோ? உனக்குத் தெரியாததற்கா யான் சொல்லவேண்டும்.

அச்வபதி.—மஹாராஜ் "கல்லானேயானாலும் கைப்பொருளுமுண்டானால், எல்லாருஞ்சென்றங் கெதிர்கொள்வர்-இல்லானை, இல்லாளும்வேண்டாள்மற் றீன்றெடுத்ததாய்வேண்டாள், செல்லாதவன் வாயிற்சொல்" என்னும் நீதிவாக்கியப்படி நாம் கேவலமான கோலத்தோடிருக்கிறோம். நம்மை வரிக்கவந்தவளோ இன்னாள்வரையில் நல்ல வைபவத்திலிருந்த ராஜகுமார்த்தி நம்வருத்தத்திற்கு இணங்கி நடக்கின்றாளோ இல்லையோ? என்கிற சந்தேஹங்கொண்டு வத்ஸனிவ்வார்த்தைசொல்லுகிறானே என்னமோ தெரியவில்லை. ராஜன் தாமப்படி ஒருக்காலும் நினைக்கவேண்டியதில்லை. கொண்டவன் குறிப்பறிந்து கொழுநனையே தெய்வமாகப்பாவித்து நடப்பாளிக்குமரி. இவளைத் தாம் மருமகளாக்கிக்கொள்வீராயின்

அளவிறந்த பாக்கியம் தமக்குண்டாவதிற் றடையில்லை. ப்ரதா நாம்பார்த்த சுபமுகூர்த்தத்திலேயே சுலக்ன முடியட்டும்.

N. B. ஏனவே வழக்கப்படி வதுவரானை நிற்கவைத்து மங்களாஷ்டகமுதலியவை நடத்தி விவாஹமஹோத்ஸவ முடிக்கவேண்டும். பிறகு 5 நிமிஷம் வரையில் பாட்டு நடக்கவேண்டியது.

